காரைக்குடி நகராட்சி

**31.01.2019 ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை: திருமதி.அ.சுந்தரம்பாள் ஆணையர் மற்றும் தனிஅலுவலர்**

**மன்றப் பொருட்கள்**

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 31.01.2019 | 1 | சின்னையா அம்பலம் நகராட்சி பள்ளியில் உள்ள கழிப்பிடங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து மராமத்துப் பணிகள் செய்திடவும் மற்றும் பள்ளியின் சமையல் கூடத்திற்கு செல்வதற்கு ஏதுவாக நடைபாதை அமைத்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>கல்விநிதியின் கீழ் அனுமதிக்கலாம் | தீர்மான எண்.330<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 2 | இந்நகராட்சி வார்டு எண்.3 குருவிக்காரன் தெருவில் உள்ள சமுதாய கழிப்பிடம் ஆழ்குழாய் கிணறு மோட்டார் பழுதடைந்து பொதுமக்கள் உபயோகப்படுத்திட இயலாமல் உள்ளது. எனவே, பொது மக்களின் பயன்பாட்டின் அவசியம் கருதி புதிய மோட்டார் பொருத்தி கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி செய்திட ஆகும் மதிப்பீடு ரூ.90000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்.331<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>3</td><td>இந்நகராட்சியில் உள்ள CC TV கேமரா அமைத்திருக்கும் கணிணியில் பொருத்தப்பட்டுள்ள DVR (Digital Video Recorder) பழுதடைந்துவிட்டது. அலுவலக நகலன் கருதி உடனடியாக புதிய DVR வாங்கி பொருத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.12,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலா் அவா்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடா்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீா்மான எண்.332<br>அலுவலகக்குறிப்புக ள் ஏற்கப்பட்டன</td></tr>
<tr><td></td><td>4</td><td>இந்நகராட்சி குடிநீா்நிதி 2018-2019ன் கீழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி சம்மையூற்று கரையில் அமைக்கப்பட்டுள்ள 11 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் நகரில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 24 ஆழ்குழாய் கிணறுகளுக்கு திரவகுளோரின் (Sodium Hypo Chloride) சப்ளை செய்தல் பணிக்கு நகா்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 28.12.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br><table><tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரா் பெயா்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr><tr><td>1</td><td>ஸ்ரீராஜா கணபதி இஞ்சினியரிங் ஒா்க்ஸ், சென்னை</td><td>மதிப்பீட்டை விட 0.68% குறைவு</td></tr><tr><td>2</td><td>ஸ்ரீசபரி இஞ்சினியரிங், சென்னை</td><td>மதிப்பீட்டை விட 2.74% அதிகம்</td></tr></table>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீராஜா கணபதி இஞ்சினியரிங் ஒா்க்ஸ், சென்னை நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.68% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>தீா்மான எண்.333<br>அனுமதிக்கப்பட்ட து</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம் | |
| | **5** | இந்நகராட்சி கணிணி பிரிவில் உள்ள கதவிற்கு (HYDRALIC DOOR CLOSER) புதியது வாங்கி பொறுத்தவும், நகராட்சி பணியாளர்கள் இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் CC TV கேமரா புதியது பொருத்தவும், கணிணி அறையில் உள்ள 2 கணிணியில் NETWORK CARD பழுதடைந்ததை புதியது மாற்றுவதற்கும் மற்றும் இதர பழுதுகளை சரி செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.334<br>அலுவலக்க்குறிப்புகள் ஏற்கப்பட்டன |
| | **6** | சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் எஸ்.வாக்கப் என்பவரால் சண்முகநாதன் பள்ளிவாசல் செஞ்சை கதவு எண்.11ல் சிட்டிஸ் பிஸ்கட் தொழிற்சாலை இயங்கி வருவதை எதிர்த்து வழக்கு எண்.WP(MD).NO.13372/2018ல் தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நகராட்சி ஆணையர், காரைக்குடி அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வரப்படுகிறது. மேற்கண்ட வழக்கினை தொடர்ந்து எடுத்து நடத்திட திரு.பி.மகேந்திரன் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்திடவும் அதற்கான செலவுத்தொகைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.3079/2018/எப்2) | தீர்மான எண்.335<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>7</td>
<td>
இந்நகராட்சியில் கீழ்க்கண்டுள்ள வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு அதற்கான தொகை செலுத்திய பின்னர் 09.09.2016 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு குடிநீர் இணைப்பு 09.09.2016ல் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அவற்றிற்கான கேட்பு 01.09.2016ல் எழுப்பப்படுவதற்கு பதிலாக கணிணியில் 01.04.2015ல் இருந்து கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. எனவே, கணிணியில் தவறாக எழுப்பப்பட்ட கீழ்க்கண்டுள்ள குடிநீர் கட்டண கேட்பு தொகையை கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>’<br>ண்</th><th>வார்டு எண்</th><th>பெயர் மற்றும் வியாபாரம்</th><th>இணைப்பு எண்</th><th>இணைப்பு வழங்கிய நாள்</th><th>கேட்பு எழுப்பப் பட்ட நாள்</th><th>ரத்து செய்ய வேண்டிய தொகை</th></tr>
<tr><td>1</td><td>08</td><td>சபரிதாஸ்,<br>31, பாரதிநகர்</td><td>111/ 008/00939</td><td>09.09.2016</td><td>01.04.2015</td><td>2567</td></tr>
<tr><td>2</td><td>04</td><td>பி.தங்கம்மாசாரா,<br>23/3, மீனாட்சிபுரம்</td><td>111/ 004/00345</td><td>09.09.2016</td><td>01.04.2015</td><td>2567</td></tr>
<tr><td></td><td></td><td>மொத்தம்</td><td></td><td></td><td></td><td>5134</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்
</td>
<td>தீர்மான எண்.336<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 8 | இந்நகராட்சியில் தலைமை நீரளிப்பு நிலையத்தில் மின்பகிர்மானத்திற்கு பொருத்தப்பட்டுள்ள Automatic Power Factor Service Panel-1ன் வழியாக நுகரப்படும் மின் அளவில் Power Factor 0.84 என்ற அளவிற்கு குறைந்துவிட்டதால் அதனை உடனடியாக சர்வீஸ் செய்து Power Factor 0.99 என்ற அளவிற்கு கொண்டு வருமாறு செய்திடவும், தவறும்பட்சத்தில் அபராத கேட்பு எழும் என தமிழ்நாடு மின் விநியோக கழக அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட Automatic Power Factor Service Panel-1ல் சர்வீஸ் பணிகள் செய்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.337<br>அலுவலகக்குறிப்புகள் அனுமதிக்கப்பட்டன |
| | 9 | இந்நகராட்சியில் தலைமை நீரளிப்பு நிலையத்தில் மின்பகிர்மானத்திற்கு பொருத்தப்பட்டுள்ள Automatic Power Factor Service Panel-2ன் வழியாக நுகரப்படும் மின் அளவில் Power Factor 0.84 என்ற அளவிற்கு குறைந்துவிட்டதால் அதனை உடனடியாக சர்வீஸ் செய்து Power Factor 0.99 என்ற அளவிற்கு கொண்டு வருமாறு செய்திடவும், தவறும்பட்சத்தில் அபராத கேட்பு எழும் என தமிழ்நாடு மின் விநியோக கழக அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட Automatic Power Factor Service Panel-2ல் சர்வீஸ் பணிகள் செய்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.338<br>அலுவலகக்குறிப்புகள் அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>10</td><td>காரைக்குடி நகராட்சி தேவகோட்டை சப்கோர்ட் நீதிமன்றத்தில் அலெக்ஸ் ஆரோக்கியசாமி என்பவரால் ஓ.எஸ்.எண்.197/2018 என்ற எண்ணில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் தனியார் நான்கு பேரும் 5வதாக மாவட்ட ஆட்சியர், சிவகங்கை 6. கோட்டாட்சியர், தேவகோட்டை, 7.வட்டாட்சியர், காரைக்குடி, 8. உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை 9வதாக ஆணையாளர், காரைக்குடி நகராட்சி ஆகியோர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை தொடர்ந்து எடுத்து நடத்திட திரு.கே.கிருஷ்ணன் வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்திடவும், மேற்கண்ட வழக்கிற்காகும் செலவுத் தொகைகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.5816/2018/எப்2)</td><td>தீர்மான எண்.339<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>11</td><td>காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-2019ன் கீழ் ரூ.3.55 இலட்சம் மதிப்பீட்டில் காரைக்குடி நகரம், கல்லுரி சாலை, ராஜீவ்காந்தி சிலை அருகில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணிக்கு 03.12.2018ல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்வாக அனுமதி அளித்ததின் பேரில் 11.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.மா.தேவி, காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.15% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திருமதி.என்.சுதா, புதுக்கோட்டை.</td><td>மதிப்பீட்டை விட 1.66% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.மா.தேவி, காரைக்குடி அவர்கள் அளித்துள்ள</td><td>தீர்மான எண்.340<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட 0.15% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>12</td>
<td>இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண்.TN63 AV5823 1,20,000 கிலோமீட்டர் துரம் கடந்துவிட்டதால் வாகனம் இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகளை சீர் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.29,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலா் அவா்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடா்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>தீர்மான எண்.341<br>அலுவலக்க்குறிப்பு கள் அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>13</td>
<td>காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.2 பிளாக் எண்.18 நகரளவை எண்.559 கழனிவாசல் ரோட்டில் உள்ள புதிய வாரச் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு 2019-2022ம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 23.01.2019 அன்று கோரப்பட்டது. மேற்படி குத்தகை இனத்திற்கு கீழ்க்காணும் விவரப்படி 3 நபர்கள் ஏலத்தில் கலந்துகொண்டனர் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>நாள்</th><th>ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்)</th><th>அதிகபட்ச ஏலம் கோரிய தொகை ரூ.</th></tr>
<tr><td>3.01.2019</td><td>1. ஜி.ராஜாமணி, 2/29-1, கள்ளமனக்குடி, புதுவயல் போஸ்ட், காரைக்குடி தாலுகா.</td><td>12,56,000/-</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்.342<br>அலுவலக்க்குறிப்பு ஏற்கப்பட்டன</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>2. டி.செந்தில்குமார், 381, சூடாமணிபுரம், காரைக்குடி.</td><td>12,58,000/-</td></tr>
<tr><td></td><td>3. பி.மலைச்சாமி, மானாமதுரை தாலுகா</td><td>12,57,000/-</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
மேற்படி வரப்பப்பெற்ற மூன்று ஏலக் கேள்விகளில் திரு.டி.செந்தில்குமார் என்பவர் ரூ.12,58,000/- அதிகப்பட்ச தொகை கோரியுள்ளார்.<br>
மேற்படி தொகையானது நகராட்சி அபிவிருத்தி பணிகளுக்கும், வளர்ச்சி பணிகளுக்கும் மற்றும் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையினை பூர்த்தி செய்ய பயன்படுகிறது. இவ்வினத்தை மறு ஏலம் விடப்பட்டால் ஏலத்தொகை கூடுதலாக வர வாய்ப்புள்ளது. எனவே வாரச்சந்தையை மறு ஏலத்திற்கு கொண்டு வர மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.5366/2018/அ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>14</td>
<td>காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான கல்லுக்கட்டி மேற்கு கடை எண்.8, வரிவிதிப்பு எண்.48ஜ அனுபோகம் செய்து வந்த திருமதி.ஜி.மீனாள் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் SA(MD).NO.666 OF 2014 வழக்குக்கு ஆஜராகி திரு.பி.மகேந்திரன் வழக்கறிஞர் அவர்கள் நடத்தியமைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/- கோரியுள்ளார். மேற்படி வழக்கறிஞர் கட்டணத்தை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.9503/2010/அ1)
</td>
<td>தீர்மான எண்.343<br>
அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **15** | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு முக்கிய திருவிழா காலங்கள் மற்றும் நோய் தடுப்பு பணிகளுக்கு நீர்த்த சுண்ணாம்பு நீர் 10000 கிலோ, பிளீச்சிங் பவுடர் 1000 கிலோ மற்றும் பினாயில் 200 லிட்டர் வாங்கிட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர், காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.**344**<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | **16** | இந்நகராட்சி குடிநீர் வாகனம் எண்.TN63 2437ல் முன்வீல் பேரிங் கட்டாகி வாகனம் இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி புதிய பேரிங் பொருத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.5000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.**345**<br>அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டன |

<table>
<tr><td></td><td>17</td><td>இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண்.TN63 T3333ல் 29.01.2019 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலகத்திற்கு நகர்நல அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆய்வுக் கூட்டத்திற்கு செல்லும் போது மதியம் 3.00 மணி அளவில் எதிர்பாராத விதமாக மாடு வாகனத்தின் முன் பகுதியில் விழுந்து சேதம் ஏற்பட்டது. வாகனம் இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. வாகன பணியின் அவசர அவசியம் கருதி பழுதுகளை சீர்செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.72,000/-க்கும் மற்றும் வாகனத்தை பழுது நீக்கம் செய்ய நேரிடையாக ஸ்ரீ அம்மன் ஆட்டோமொபைல்ஸ், காரைக்குடி நிறுவனத்திடம் பழுது சீர் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண்.346<br>அலுவலகக்குறிப்பு கள் ஏற்கப்பட்டன</td></tr>
<tr><td></td><td>18</td><td>காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் மையப் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடை எண்.1க்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 23.01.2019 அன்று கோரப்பட்டது. மேற்படி இனத்திற்கு கீழ்க்காணும் விவரப்படி 2 நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டனர் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>நாள்</td><td>ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி (திருவாளர்கள்)</td><td>அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய வாடகை தொகை ரூ.</td></tr>
<tr><td rowspan="2">23.01.2019</td><td>1. டி.செந்தில்குமார், 381, சூடாமணிபுரம், காரைக்குடி.</td><td>5,100/-</td></tr>
<tr><td>2. எஸ்.அருள்சாமி, 73, வெங்டேஸ்வர் வீதி, வ.உ.சி ரோடு, காரைக்குடி.</td><td>4,700/-</td></tr>
</table></td><td>தீர்மான எண்.347<br>அலுவலகக்குறிப்பு கள் ஏற்கப்பட்டன</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>மேற்படி வரப்பப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார் என்பவர் ரூ.5,100/- அதிகப்பட்ச தொகை கோரியிருந்தார்.<br>மேற்படி கடைக்கு அருகிலுள்ள கடைகளின் வாடகைத் தொகையை ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்டுள்ள தொகையை விட கூடுதலாக உள்ளதால் இவ்வினத்தை மறு ஏலம் விடப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாக வர வாய்ப்புள்ளது. எனவே மேற்படி கடையை மறு ஏலத்திற்கு கொண்டு வர மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.5366/2018/அ1) | |
| | 19 | சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் எஸ்.சுப்பிரமணி மகாதேவன் என்பவரால் வழக்கு எண்.WP(MD)No.18233/2017ல் தொடரப்பட்டுள்ளது. மேற்படி சர்வே வார்டு எண்.1, பிளாக் எண்.6 நகரளவு எண்.656/1ல் உள்ள இடம் தனக்கு பாத்தியப்பட்டதென தெரிவித்து வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் பிரதிவாதியாக ஆணையர், காரைக்குடி நகராட்சி அவர்களை சேர்த்து வழக்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்வழக்கினை தொடர்ந்து எடுத்து நடத்திட இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.பி.மகேந்திரன், சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளை அவர்களை நியமனம் செய்திடவும், அதற்கான செலவுகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.4897/2017/எப்1) | தீர்மான எண்.348<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | **20** | இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற துப்புரவு பணியாளர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதிய பாக்கித் தொகை மற்றும் குழுகாப்பீட்டுத் தொகை வழங்கக் கோரி தொழிலாளர் நீதிமன்றம் மதுரையில் வழக்கு எண்கள் CP.NO.9/13, CP.NO.10/13, CP.NO.49/16, CP.NO.69/17, CP.NO.8/18, CP.NO.99/17 எண்களில் நகராட்சியை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்குகளுக்கு நகர்மன்ற வழக்கறிஞர் திரு.வி.எஸ்.கிருஷ்ணன் அவர்கள் நகராட்சி சார்பாக ஆஜராகி இவ்வழக்குகளுக்கு உரிய வழக்கு கட்டணம் ரூ.36000/- வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்.349 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **21** | காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பொது இடங்களிலும், பள்ளி கூடங்களிலும், தினசரி நில வேம்பு குடிநீர் காய்ச்ச 12.10.2018, 20.10.2018, 22.10.2018, 26.11.2018, 03.12.2018, 11.12.2018 ஆகிய தினங்களில் வாங்கிய எரிவாயு சிலிண்டர் செலவு தொகை ரூ.5608/-ஐ திரு.ஆர்.ஆதிநாராயணன், துப்புரவு ஆய்வாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. தனி அலுவலர், காரைக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.350 அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டன |

| | | | |
|---|---|---|---|
| | **22** | காரைக்குடி நகராட்சி வரிவிதிப்பு எண்கள்.111/003/00607, 111/003/00993, 111/003/00994, 111/003/00995, 111/003/00996, 111/005/00889, 111/005/00888, 111/005/00887, 111/005/00996, 111/005/00896, 111/005/00884, 111/005/00885 தொடர்பாக திரு.ப.சுப்பிரமணியன் என்பவரால் ஆணையர் காரைக்குடி நகராட்சி அவர்கள் மீது காரைக்குடி டி.மு.கோர்டில் தொடரப்பட்ட வழக்கு ஓ.எஸ்.எண்.148/2018க்கு நகராட்சி சார்பாக வக்காலத்து தாக்கல் செய்து வழக்கு நடத்துவதற்கு நகர்மன்ற வழக்கறிஞர் திரு.வி.எஸ்.கிருஷ்ணன் அவர்களை நியமனம் செய்யவும் அதற்கான வழக்கு கட்டணத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.5586/2018/அ4) | தீர்மான எண்.351<br>அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **23** | காரைக்குடி நகராட்சி சொத்துவரி, காலியிட வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், வரியில்லா இனங்கள் மற்றும் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள் உரிமக் கட்டணம் ஆகியவைகள் 2018-2019ம் ஆண்டு வரையிலான வரித்தொகையினை நிலுவையின்றி செலுத்திடக் கோரி பொதுமக்களுக்கு ஆட்டோ ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.9192/2012/அ2) | தீர்மான எண்.352<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td>24</td>
<td>காரைக்குடி நகராட்சியில் 2018-2019 நிதியாண்டிற்கான சொத்துவரி, காலியிடவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் D&O Licence Fees ஆகியவைகள் 2018-2019ம் ஆண்டு வரையிலான வரித் தொகையினை நிலுவையின்றி செலுத்திடக் கோரி பொதுமக்களுக்கு ஆட்டோவில் ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு 30.01.2019 தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவன பெயர்</th><th>நாள் ஒன்றுக்கு தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>கே.சுரேஷ், 2, அன்சாரி தெரு, காட்டுத்தலைவாசல், காரைக்குடி</td><td>850</td></tr>
<tr><td>2</td><td>கே.ஆர்.கலையரசன், முனிசிபல் வாய்க்கால் தெரு, காரைக்குடி.</td><td>1100</td></tr>
<tr><td>3</td><td>கே.கண்ணன், சிவன்கோவில் தெரு, காரைக்குடி.</td><td>1250</td></tr>
</table>
<br>
மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திரு.கே.சுரேஷ், 2, அன்சாரி தெரு, காட்டுத்தலைவாசல், காரைக்குடி விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
(ந.க.எண்.9192/2012/அ2)</td>
<td>தீர்மான எண்.353 அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டன</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 25 | கஜா புயலால் சேதமடைந்த இந்நகராட்சி வார்டு எண்.25 சிதம்பரனார் தெரு மற்றும் வார்டு எண்.27 வெங்கடாசலம் தெருவில் உள்ள சத்துணவு மையத்தில் மராமத்துப் பணிகள் செய்திடவும் மற்றும் முத்துப்பட்டணம் நகராட்சி பள்ளியில் உள்ள சமயலறையின் பழுதடைந்த தரைத்தளத்தை சரி செய்திடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>கல்வி நிதியின் கீழ் அனுமதிக்கலாம் | தீர்மான எண்.354 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| | 26 | TURIP 2018-2019 திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் உள்ள 120 அடி சாலை மேம்பாடு செய்யப்பட்டு 11.00 மீட்டர் அகலத்திற்கு (2x5.50மீ) புதிதாக தார்ச்சாலை அமைக்கப்பட்டதால் சாலையின் உயரம் அதிகரித்துவிட்டது. அதனால் மேற்படி சாலையின் நடுவில் இருந்த தடுப்பு சுவர் (Divider) முழுவதுமாக மூடப்பட்டுவிட்டது. அதனால் அந்த சாலையில் செல்லக்கூடிய வாகனங்கள் தடம் மாறி செல்லக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படும் நிலை உள்ளது. அதனை தொடர்ந்து தினசரி நாளிதழ்கள் மூலம் மற்றும் பொதுமக்களிடமிருந்து மேற்படி தடுப்பு சுவரை உயர்த்தி அமைத்திடக் கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, விபத்துகளை தடுத்திடும் வகையில் 120 அடி சாலையில் (MG சாலை சந்திப்பு ரோடு முதல் பஸ் நிலைய ரோடு வரை) தடுப்பு சுவர் (Divider) அமைத்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்.355 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | **27** | இந்நகராட்சி தேவகோட்டை சாலையில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் ஆங்காங்கே குப்பைகள் மேடு மேடாக குவித்து வைக்கப்பட்டுள்ளன. அதனால் தற்போது தினந்தோறும் சேகரமாகும் குப்பைகளை கொட்டுவதற்கு இடப்பற்றாக்குறை உள்ளது. எனவே, ஆங்காங்கே பரவலாக உள்ள குப்பை மேடுகளை ஒழுங்குபடுத்தி மேலே ஏற்றுவதற்கு வசதியாக சாய்தளம் அமைக்கும் பணியினை செய்திட வேண்டியுள்ளது. இப்பணியை 360 டிகிரி டோசர் இயந்திரம் கொண்டு செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்.356 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |
| | **28** | இந்நகராட்சி வார்டு எண்.1, பிளாக் எண்.10, சர்வே எண்.946, 1094, 1095 (ம) 1097ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட பூங்கா இடத்தினை கல்துண்கள் அமைத்து கம்பி வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளவும், சி.எம்.சி. சாலையில் (டி.எஸ்.எண்.420, வார்டு எண்.16) கிழக்குப் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை கம்பி வேலி அமைத்து பாதுகாக்கும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.2.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம் | தீர்மான எண்.357 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 29 | இந்நகராட்சி குடிநீர் வாகனம் எண்.TN63 2437க்கு புதிய பேரிங் பொருத்தும் பணி செய்ய 31.01.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/S.ஸ்ரீ முருகேஸ்வரி ஸ்பிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி - ரூ.4680/-<br>2. M/S.ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மொபைல்ஸ், தேவகோட்டை- ரூ.4800/-<br>3. M/S.ஸ்ரீ கல்கி சர்வேஸ்வரன் ஒர்க்ஸ், தேவகோட்டை - ரூ.5100/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S.ஸ்ரீ முருகேஸ்வரி ஸ்பிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.358 அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டன |
| | 30 | இந்நகராட்சி பொதுப்பிரிவில் உள்ள RICHO ஜெராக்ஸ் மிஷின் 2013ம் ஆண்டு வாங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்தது. தற்போது சிறு சிறு பழுதுகள் சரி செய்யப்பட்டு இயக்கப்பட்டு வந்த நிலையில் மிகவும் பழுதடைந்து இயக்க இயலாத சூழ்நிலையில் உள்ளது. தற்போது நகராட்சியில் வரி சீராய்வு பணி நடைபெற்று வருவதால் சிறப்பு அறிக்கை எடுப்பதற்கு ஜெராக்ஸ் மிஷின் தேவைப்படுவதால் பழைய ஜெராக்ஸ் மிஷினை கொடுத்து அதற்கு பதிலாக புதிதாக ஒரு ஜெராக்ஸ் மிஷின் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.65,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.359 அலுவலகக்குறிப்புகள் ஏற்கப்பட்டன |

| | | | |
|---|---|---|---|
| | 31 | வேலூரில் இயங்கி வரும் தேசிய சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொண்டு நிறுவனம் பராமரிப்பில்லாத மாடுகளை தத்தெடுத்து அவற்றை பராமரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக காரைக்குடி நகராட்சி உரக்கிடங்கு வளாகத்தில் சுமார் 20 மாடுகளை வைத்து பராமரித்திட சம்மதம் தெரிவித்து மேற்படி நிறுவனம் ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளது. நகரில் உள்ள உணவகங்கள், தினசரி மார்க்கெட், வாரச்சந்தை ஆகிய இடங்களிலிருந்து உரக்கிடங்கிற்கு கொண்டு வரப்படும் கழிவுகளை மாடுகளுக்கு தீவனமாக கொடுத்து கழிவுகளை அவ்வப்போது அகற்றுதல், மாடுகளின் சாணம் மற்றும் கோமயத்தை குப்பைகளை மக்கச் செய்திடும் பணிகளுக்கு பயன்படுத்தவும் மேற்படி நிறுவனம் ஒப்புதல் தெரிவித்துள்ளது. அதன்படி, நகராட்சி உரக்கிடங்கின் ஒரு பகுதியில் 20 மாடுகளை வைத்து பராமரித்திட ஏதுவாக ஷெட் அமைத்து, அதில் தண்ணீர் மற்றும் தீவனங்கள் வழங்கிட ஏதுவாக தொட்டிகள் அமைத்திட தாயர் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | தீர்மான எண்.360 அலுவலகக்குறிப்பு கள் ஏற்கப்பட்டன |
| | 32 | இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணியாற்றி 29.02.2016 அன்று ஓய்வு பெற்ற திரு.எம்.நாராயணன் என்பவர் தன்னை பழைய ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD).NO.23959 OF 2018 என்ற எண்ணில் அரசுச் செயலர், நகராட்சி நிர்வாக ஆணையர், காரைக்குடி நகராட்சி ஆணையர் ஆகியோரை பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்கிற்கு இந்நகராட்சி சார்பில் எதிர்வாதுரை தயார் செய்து வழக்கு நடத்திட திரு.பி.மகேந்திரன் வழக்கறிஞரை நியமிக்கவும், அவருக்கு இவ்வழக்கிற்கான கட்டணம் செலுத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.361 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>(ந.க.எண்.5497/2018/சி1)</td><td></td></tr>
<tr><td></td><td>33</td><td>காரைக்குடி நகராட்சியில் மத்திய, மாநில அரசு நிதியின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.
<table>
<tr><th>.<br>ண்</th><th>திட்டத்தின் பெயர்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td></td><td>அடிப்படை கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2015-2016</td><td>கணேசபுரத்தில் துப்புரவு தொழிலாளர் குடியிருப்புகள் கட்டுதல்</td><td>2<br>30.00</td></tr>
<tr><td></td><td>அம்ரூத் திட்டப்பணி 2016-2017</td><td>5 பூங்கா மேம்பாடு செய்தல் பணி</td><td>2<br>64.00</td></tr>
<tr><td></td><td>அம்ரூத் திட்டப்பணி 2017-20</td><td>1 பூங்கா மேம்பாடு செய்தல் பணி</td><td>6<br>8.402</td></tr>
<tr><td></td><td>மீன்வள துறை நிதி 2017-2018</td><td>கழனிவாசல் பகுதியில் நவீன மீன் நாளங்காடி கட்டுதல்</td><td>1<br>00.00</td></tr>
<tr><td></td><td>தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத் திட்டம்</td><td>அரசு பொது மருத்துவமனை வளாகத்தில்</td><td>7<br>0.00</td></tr>
</table></td><td>தீர்மான எண்.362 அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | தங்கும் விடுதி கட்டுதல் | |
| | TURIP 2017-2018 | சாலைப் பணிகள் | 100.00 |
| | 14th Finance Committee Fund | சாலைப்பணி, குடிநீர் பணி | 150.00 |
| | Micro Compost Centre | மக்கும் குப்பைகளை உரமாக்குதல் | 325.00 |
| | TURIP 2018-19 | சாலைப்பணிகள் | 1000.00 |
| 0 | Bio- Mining | நுண்ணுயிர் மையம் | 737.00 |
| 1 | IUDM 2018-2019 | சாலைப்பணிகள் | 1992.70 |
| 2 | MLA Scheme 2018-2019 | நாடக மேடை அமைத்தல், பேவர் பிளாக் பதித்தல் மற்றும் மழை நீர் வடிகால் அமைத்தல் போன்ற பணிகள் செய்தல் | 32.50 |
| 3 | MP Scheme 2018-2019 | உயர்மின் கோபுரம் விளக்கு அமைத்தல் மற்றும் சீரணி அரங்கம் கட்டுதல் | 26.00 |

மேற்கண்ட திட்டப்பணிகளை தவிர்த்து பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், நீர்நிலைகள் மேம்பாடு பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைத்து புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மேற்கண்டவாறு நடைபெறும் திட்டப்பணிகளை கண்காணித்திடவும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது உயர் அலுவலர்களால் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல், புகைப்படங்கள் எடுத்து அதில் பணியின் பெயர் தட்டச்சு செய்து அனுப்புதல் மற்றும் அவ்வப்போது கோரப்படும்

| | | | |
|---|---|---|---|
| | | திட்டப்பணிகளுக்கு கருத்துருக்கள் தயார் செய்தல் போன்ற பணிகளை செய்திட உதவிப் பொறியாளர் ஒருவர் மட்டும் உள்ளதால் அவருக்கு உதவியாக கணிணி தட்டச்சு மற்றும் Autocad தெரிந்த ஒரு நபரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை அடிப்படையில் Outsourcing முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும், அதற்காக 85 நாட்களுக்கு உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>பொதுநிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம். | |

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி